## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** வவுனியா மாவட்டத்தின் கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்கள் 09 இன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2022 ஆம் ஆண்டிற்குரிய வவுனியா மாவட்டத்தின் 09 கமநல சேவைக் குழுக்களுக்குரிய கணக்காய்வு அறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிறைவேற்றுக் குழு 09ஆன அறிக்கைகளில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்தது. வெளியிடப்பட்டிருந்ததுடன் அதற்கு காரணங்களாக இருந்த பொருண்மையான குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் உட்பட கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செட்டிகுளம் கமநல சேவை செயற்குழுவிற்கான கணக்குகள் பேணுவதற்கான செயல் விதிகள் சுற்றறிக்கை இல 107 இன் பிரகாரம் கட்டடங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்கு முறையே நூற்றுக்கு 5 மற்றும் நூற்றுக்கு 20 நேர் கோட்டுமுறையில் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட வேண்டிய போதிலும் குறைந்து செல்லும் விகிதத்தில் பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செட்டிகுளம் கமநல சேவை செயற்குழுவிற்கான விதை நெல் இருப்பு மற்றும் இரசாயன இருப்பு வருமதி கூட்டு மொத்தம் ரூபா 246,690 தொகை 15 தொடக்கம் 22 | குறிப்பிட்ட காலப்பகுதியில் கடமையாற்றிய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் உரிய முறையில் சொத்துக்களையும் | சட்டவிதிகளுக்கிணங்க கணக்குகளிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்கள் பெறப்பட வேண்டிய கணக்கில் காட்டப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பொறுப்புகளையும் புதிய உத்தியோத்தருக்கு பாரமளிக்காதபடியால் இவ்விடயம் பெறப்பட வேண்டிய நட்ட வருமதியாக காட்டப்பட்டுள்ளது. | |
| (ஆ) | முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த கூட்டு மொத்தம் ரூபா 9,600,000 கிரயப் பெறுமதியுடைய 08 உழவு இயந்திரங்கள் கோவில்குளம் கமநல சேவை நிலையத்தினால் உபயோகிக்கப்பட்டு வருகின்ற போதும் அவற்றின் பெறுமதியை மீள் மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்படாமையால் நடைமுறையல்லா சொத்துக்களின் பெறுமதி நிதிநிலைமைக்கூற்றில் குறைத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | உழவு இயந்திரங்களுக்கான பெறுமதிகளை மதீப்பீடு செய்து வழங்குமாறு மதீப்பீட்டுத் திணைக்களத்துக்கு அறிவித்திருந்த போதும் அவர்களால் உரிய நேரத்தில் குறித்த பெறுமதிகள் கணிப்பீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து சரியான பெறுமதிகள் பெற்று நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 1.3.3 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 08 நிலையங்களில் வருமதி மற்றும் சென்மதி மீதிகளான கூட்டுமொத்தம் ரூபா 27,354,372 காட்டப்பட்டிருந்த போதிலும் அவற்றினை உறுதிப்படுத்துவதற்கு போதிய சான்றுகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்காமையால் அவற்றினை சான்றுபடுத்தமுடியாதுள்ளது. | இக்கணக்குகள் தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் யுத்த நடவடிக்கை காரணமாக அழிவடைந்துள்ளமையினாலும் தரவுகள் சரிவர கிடைக்கப்பெறாமையினாலும் இக்கணக்குகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் விட்டுவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. | குறித்த மீதி தொடர்பில் தகுந்த சான்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 யூன் 25 ஆம் திகதிய 08/2020 ஆம் இலக்க கமநல அபிவிருத்தித்திணைக்களத்தின் சுற்றறிக்கை | 07 கமநல சேவை செயற்குழுக்களின் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப்பணம் அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் | பிணைப்பணம் செலுத்த வேண்டிய உத்தியோகத்தரிடம் இனிவரும் காலங்களில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | லை. | | |
| (ஆ) | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதி 110 (1) மற்றும் (2) | 04 கமநல சேவை செயற்குழுக்களினால் இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை | இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பிலான பதிவேடுகள் எதிர்வரும் காலங்களில் பேணப்படும். | நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கை | 02 கமநல சேவை செயற்குழுக்களுக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களையும் ஆவணப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தொடர்ந்துவரும் ஆண்டுகளில் அனைத்து சொத்துக்களையும் ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான குழுக்களின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு கூட்டுமொத்தம் ரூபா 2,549,466 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு கூட்டுமொத்தம் ரூபா 5,528,844 உடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 2,979,378 இனால் அதிகரித்து காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட குருக்கள்புதுக்குளம் கமநலசேவை நிலையத்தின் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 1,502,820 ஆக அமைந்தமை இதற்கான காரணியாகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 கமநல சேவைகள் நிலையங்களினால் குளங்களின் எல்லைகளை அடையாளப்படுத்துவதற்காக மீளாய்வாண்டில் 1929 எல்லைக் கற்கள் ரூபா 1,390,350 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், 1924 கற்கள் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது நிலையத்தில் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. | கமநல சேவைகள் நிலையத்தில் கொள்வனவு செய்யப்பட்ட எல்லை கல்லானது குளங்களின் எல்லைகளுக்கு போடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் | எல்லைக்கற்களை விரைவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | ஓமந்தை கமநல சேவைகள் நிலையத்தில் அழிவடைந்த விவசாய உள்ளீடுகளாக நீண்ட காலமாக காட்டப்பட்டு வரும் ரூபா 1,130,070 பெறுமதியான 03 வகையான இருப்புக்கள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக்கணக்குகள் தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் யுத்த நடவடிக்கை காரணமாக அழிவடைந்துள்ளமையினால் இக்கணக்குகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் விட்டுவிடுவதற்கு அல்லது | குறித்த மீதி தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன | |
| (இ) | ஓமந்தை கமநல சேவைகள் நிலையத்தில் 25 வருடங்களுக்கு மேலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வரும் விற்பனை நிலைய கட்டிட முற்பணம் ரூபா 125,000 தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக்கணக்குகள் தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் யுத்த நடவடிக்கை காரணமாக அழிவடைந்துள்ளமையினால் இக்கணக்குகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் விட்டுவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. | குறித்த மீதி தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் உழவு இயந்திர திருத்தக் கூலி முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 207,432 தொடர்பில் ஓமந்தை கமநல சேவைகள் நிலையத்தினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக்கணக்குகள் தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் யுத்த நடவடிக்கை காரணமாக அழிவடைந்துள்ளமையினால் இக்கணக்குகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் விட்டுவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. | குறித்த மீதி தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | நெடுங்கேணி கமநல சேவைகள் நிலையத்தின் மிகை நிதியை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் அரசவங்கியொன்றில் பராமரித்துச் செல்லும் நடைமுறைக்கணக்கில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 8,217,420 ஆன தொகை வைப்பிலிடப்பட்டிருந்தது. | மிகை நிதியினை இனி வரும் காலங்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அரச நிதி வினைத்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஊ) | கோவில்குளம் கமநல சேவைகள் நிலையத்தின் 05 எண்ணிக்கையான காணிகளுக்கு உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளாததுடன் அவற்றில் இரு காணிகளின் பெறுமதி ரூபா 624,050 ஆக நிதி நிலைமைக்கூற்றில் பெறுமதியிடப்பட்டுள்ளது. | கமநல சேவைகள் நிலையத்திற்குரிய 05 எண்ணிக்கையான காணிகளுக்கு ஆவணம் பெற்றுக் கொள்வதற்கான சான்றுகள் இணைத்து பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. நிலையான சொத்துக்களுக்கான பெறுமதிகளை மதீப்பீடு செய்து வழங்குமாறு மதீப்பீட்டுத் திணைக்களத்துக்கு அறிவித்திருந்தும் அவர்களால் கணிப்பீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிலையத்திற்கு சொந்தமான காணிகளின் உரிமையானது நிலையத்தின் பெயருக்கு உரிமைமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுச் செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 கமநல சேவை செயற்குழுக்களின் கூட்டு மொத்தம் ரூபா 1,314,814 பெறுமதியான சேதன இரசாயனப் பொருட்கள் மற்றும் பசளைகள் காலாவதியான நிலையில் காணப்பட்டது. | காலாவதியான உரம் மற்றும் கிருமிநாசினி இருப்பை அழிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | காலாவதியான மருந்து, பசளைபொருட்களை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | பம்பைமடு கமநல சேவைகள் நிலையத்தின் 2008 ஆம் ஆண்டிலிருந்து நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்பட்டு வருகின்ற இனங்காணப்படாத மீதி ரூபா 1,139,910 தொடர்பில் இது வரை உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலத்தில் தேவையான ஆவணங்களினை கண்டறிந்து நிதிக்கூற்றுக்களினை சரியான முறையில் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | குறித்த மீதி தொடர்பில் சட்ட விதிகளிற்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 கமநல சேவை செயற்குழுக்களின் வருமதியாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கூட்டு மொத்தம் ரூபா 18,716,779 இனை கடந்த 01 தொடக்கம் 11 வருடங்கள் வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலையத்தினால் அறவிடப்பட வேண்டியுள்ள கணக்குகளை அறவீடு செய்வதற்கு சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறியத்தரப்பட்டுள்ளதுடன் இனிவரும் ஆண்டுகளில் முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வருமதிகளை உரிய காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | தீர்ப்பனவு செய்ய வேண்டிய ரூபா 13,500,282 பெறுமதியான 24 சென்மதிகளினை கடந்த 01 தொடக்கம் 12 வருடங்களுக்கு மேலாக தீர்ப்பனவு செய்வதற்கு 05 கமநல சேவை செயற்குழுக்களினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொடுத்து தீர்க்கப்பட வேண்டிய சென்மதிகள் உரிய கொடுப்பனவாளர்களிடம் விசாரணை செய்யப்பட்டு செலுத்த வேண்டிய தொகைகள் இனி வரும் காலங்களில் உரியவர்களிடம் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சென்மதிகளை உரிய காலத்தில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படல் வேண்டும். |

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செட்டிகுளம் கமநல சேவை நிலையத்தினால் மானியமாக வழங்கப்பட வேண்டிய உரத்திற்காக அறவிடப்பட்ட ரூபா 513,580 தொகை நீண்டகாலமாக | மானிய உரத்தினை விலைக்கு பெற்ற பயனாளிகளுக்கு மேற்குறித்த பணத்தினை மீளச்செலுத்த | குறித்த நிதியினை பயனாளிகளுக்கு மீளழிப்பு செய்வதற்கு |

| | | |
|---|---|---|
| பயனாளிகளுக்கு செலுத்தப்படாமல் நிதிக் கூற்றுக்களில் நடைமுறைப்பொறுப்பாக காட்டப்பட்டுள்ளது. | நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.5 வாகன முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 07 கமநல சேவை செயற்குழுக்களின் உழவு இயந்திரங்கள், உழவு இயந்திப் பெட்டிகள், நெல் அறுவடை செய்யும் இயந்திரம், மற்றும் மோட்டார் சைக்கிள் 06 தொடக்கம் 10 வருடங்களுக்கு மேலாக பாவனைக்குட்படுத்த முடியாத நிலையில் உள்ளபோதம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் வாகனங்கள் திருத்தம் செய்து பாவனையில் ஈடுபடுத்துவதற்கும், உழவியந்திரங்களை மதிப்பீடு செய்து பகிரங்க ஏல விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | வாகனங்கள் மற்றும் உபகரணங்களை திருத்தம் செய்து பாவனையில் ஈடுபடுத்துவதற்கு அல்லது வேறு பொறுத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | வவுனியா மாவட்ட செயலகத்தினால் ரூபா 810,455 செலவில் உழவியந்திரமொன்றை திருத்தங்கள் மேற்கொண்டு உலுக்குளம் கமநல சேவைகள் நிலையத்திற்கு 2022 ஆவணி மாதம் 16 ஆம் திகதி கையளிக்கப்பட்டிருந்த போதும் குறித்த உழவியந்திரமானது கணக்காய்வு திகதியான 2023 யூலை மாதம் 13ஆம் திகதி வரை பாவனைக்குட்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது. | உழவு இயந்திரம் வழங்கப்பட்ட அன்று வரும் வழியில் Hydrolic செயலிழந்தமை காரணமாக பாவனைக்கு உட்டப்படுத்தப்பட முடியாத நிலைமை இருந்தது. இது தொடர்பாக ரம்பாவ பிரதேச நீர்ப்பாசன திணைக்களத்திற்கு தொலைபேசி மூலம் அறியத்தரப்பட்ட போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | வாகனங்களை பாவனைக்குட்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.6 சொத்து முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2011 ஆம் ஆண்டு ரூபா 1.5 மில்லியன் பெறுமதியில் கனகராயன்குளத்தில் நிர்மாணிக்கப்பட்ட உரக் களஞ்சியம் 2018 ஆண்டு முதல் பாவனைக்குட்படுத்தாமல் உள்ளமை அவதானிக்கப்பட்டது. | உரக்களஞ்சியத்தினை பயனுள்ள வகையில் பாவனைக்கு உட்படுத்துவதற்கு முயற்சிக்கப்படுகின்றது. | களஞ்சிய கட்டடத்தினை பாவனைக்குட்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (ஆ) | ஓமந்தை கமநல சேவைகள் நிலையத்தினால் ரூபா 283,289 செலவில் கொள்வனவு செய்யப்பட்டு இணைப்புச் செய்யப்பட்ட கண்காணிப்பு (CCTV) கெமராக்கள் ஒரு வருடத்திற்கு மேலாக பாவனையின்றி | கூரை திருத்தம் செய்யப்படாத காரணத்தினால் மழை காலத்தில் ஒழுக்கு காரணமாக மின் இணைப்பு தடைப்பட்டு CCTV கெமராக்கள் இயங்க முடியாத நிலையில் உள்ளது. | சொத்துக்கள் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் பராமரிப்புக்கள் உரியவாறு |

| | | |
|---|---|---|
| உள்ளதுடன் அவற்றை திருத்தி பாவனைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூரை வேலைக்கான வேண்டுகோள் எமக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக CCTV இயங்க வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.7 வேறு அமைப்பின் சொத்துக்களை பயன்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வவுனியா நகரின் மத்தியில் அமைக்கப்பட்ட உழவர் சந்தை கட்டடத்திற்கான உரிமை நிலையத்திற்கு இல்லாத போதும் அதனை புனரமைத்த செலவு ரூபா 194,866 செலுத்தப்பட்டமை முறையற்ற கொடுப்பனவாகும். | வவுனியா நகரின் மத்தியில் அமைக்கப்பட்ட உழவர் சந்தை கட்டடத்தின் புனரமைப்பு பணிகள் எமது கடிதத்திற்கு அமைவாகவே உரிய செலவு மேற்கொள்ளப்பட்டது. இத்தொகை மாவட்ட கமக்காரர் அமைப்பிடமிருந்து மீளப் பெறப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | புனரமைப்புச் செலவினை விரைவில் மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**4. வருடாந்த செயற்பாட்டுத்திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 08 கமநல சேவை செயற்குழுக்களின் 2020 சனவரி 01 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க கமநல அபிவிருத்தித் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் ஆண்டுகளில் கமநல சேவைகள் நிலைய மட்டத்தில் பொருத்தமான வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டு கமநல சேவைகள் நிலைய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

**4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்திற்கமைவாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளினை (2030 ஆம் ஆண்டில்) அடைந்து கொள்ளும் பொருட்டு 08 நிலையங்களினால் செயற்படுத்தப்படுவதற்குரிய | எதிர்வரும் ஆண்டுகளில் கமநல சேவைகள் நிலைய மட்டத்தில் பொருத்தமான நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் சுட்டிகளை இணங்கண்டு இலக்கினை அடைவதற்கான முறையாக செயற்திட்டம் தயாரிக்கப்பட்டு கமநல சேவைகள் நிலைய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு ஏற்ப செயற்பாடுகள் அடையாளம் காணப்பட்டு செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

நடவடிக்கைகள்
எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கமநல வங்கி**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 கமநல சேவை செயற்குழுக்களினால் கமநல வங்கியில் 2022 திசெம்பர் 31 இல் 1364 பயனாளிகளிடமிருந்து பெற வேண்டிய கடன் தொகை கூட்டு மொத்தம் ரூபா 49,145,512 இனை கடந்த 01 தொடக்கம் 11 வருடங்களாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளில் கடன்களை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கடன்களை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் |